
ஜனா


வெங்கடேசன்

தாமோதரன்




பார்த்திபன்


முத்துக்குமார்


பெரியசாமி


அன்புராஜ்

**முத்துக்குமார்,**
***இஸ்திரி கடைக்காரர்.***

நான் எனது தொழிலுக்குத் தேவையான அடுப்புக் கரியை முன்பு ஒரு கிலோ 18 ரூபாய்க்கு வாங்குவேன். இந்த பட்ஜெட் செய்த புண்ணியத்தால் பெட்ரோல், டீசல் விலை ஏறியதால் கரியின் விலையும் ஏறிவிட்டது. இப்போது 27 ரூபாய்க்கு ஒரு கிலோ கரியை வாங்குகிறேன். இதனால் நானும் வாடிக்கையாளர்களிடம் துணியை இஸ்திரி போட அதிக கட்டணம் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பால், அரிசி விலை ஏறியுள்ளதால் என்னைப் போல குறைந்த வருமானம் உள்ளவர்கள் வாழ்க்கையை ஓட்ட மிகுந்த சிரமப்பட வேண்டியுள்ளது.

**ஆர். பெரியசாமி,**
***பொறியாளர்.***

மொபைல் ஃபோனுக்கு வரிச் சலுகை அளித்திருக்கிறார்கள். இது தேவையில்லை. ஏனெனில் தேவையானவர்களுக்கு மொபைல் ஃபோன் முன்பே போய் சேர்ந்துவிட்டது. இந்நிலையில் இப்போது மொபைலுக்கு அளித்துள்ள வரிச் சலுகை கல்லூரி மாணவர்கள் அதிக அளவில் மொபைல் வாங்கத்தான் வழி வகுக்கும். இதனால், அவர்கள் மொபைலை தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. செட்டாப் பாக்ஸ், மைக்ரோ ஓவனுக்கு வரிச் சலுகை அளித்திருப்பதற்குப் பதில் உணவுப் பொருட்களுக்கு வரிச் சலுகை அளித்திருக்கலாம். உணவு விடுதிகளின் வரியைக் குறைத்திருக்கலாம். பெட்ரோல், டீசலுக்கு வரி உயர்த்தாமல் இருந்திருக்கலாம். பெரும்பாலான பொருட்களுக்கு 2 சதவீதம் உற்பத்தி வரி என்ற அறிவிப்பு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

**அன்புராஜ்,**
***சிப்ஸ் கடை உரிமையாளர்.***

பெட்ரோல், டீசல் விலை அதிகமாவதால் டிரான்ஸ்போர்ட் செலவு அதிகமாகுது. உற்பத்தி வரியும் இரண்டு சதவீதம் அதிகமாகுது. இதனால், எங்கள் தொழிலுக்கு தேவையான காய்கறிகள், எண்ணெய் விலைகள் அதிகரித்துள்ளன. ஆனால், நாங்கள் சிப்ஸ் விலைகளை ஏற்ற முடியாது. இதனால், எங்களுக்கு லாபம் குறைவாகவே கிடைக்கும்.

**அன்னலட்சுமி,**
***பூ விற்பவர்.***

மத்திய பட்ஜெட்டால் எல்லா பொருட்களின் விலையும் ஏறிப் போச்சு. பெட்ரோல், டீசல் விலை ஏறியதால் பூவோட விலையும் ஏறிப் போச்சு. ஒரு முழம் பூ 5 ரூபாய்க்கு விற்ற துக்குப் பதில் 10 ரூபாய்க்கு விற்க வேண்டியுள்ளது. இதனால், வியாபாரம் மந்தமாக உள்ளது. இந்த பட்ஜெட் வசதியானவர்கள் மட்டும் பலனடைய வழி செய்கிறது. அடித்தட்டு மக்களுக்கு எந்த சலுகையையும் செய்யவில்லை. நகை விலை ஏறிப் போச்சு. இதனால், ஏழைகள் ஒரு சவரன் தங்க நகை வாங்குவதற்குக்கூட படாதபாடு பட வேண்டியுள்ளது. ஆனால், எங்கள மாதிரியான குடும்பத்திற்கு வரும் மாப்பிள்ளைகள் வரதட்சணையாக குறைந்த பட்சம் 10 சவரன் தங்க நகை கேட்கிறார்கள். நாங்கள் எங்கே போவது?


நாகராஜ்


கண்ணன்

**லட்சுமி பாலாஜி,**
***மருந்துக் கடை விற்பனையாளர்.***


கோவிந்தசாமி

இந்த பட்ஜெட்டில் மருந்து பொருட்களுக்கு உற்பத்தி வரி 6 சதவீதம் குறைத்திருப்பது வரவேற்கத்தக்கது. இதனால், மருந்து விலை குறையும். வாடிக்கையாளர்கள் பலனடைவார்கள். பெட்ரோல், டீசல் விலை இப்போது மட்டும் இல்லை, எப்போதும் ஏறிக்கொண்டே இருக்கிறது. கஷ்டப்படுபவர்களுக்குத் தேவையான பொருட்களின் விலை குறையல. ஆனால், வசதியுள்ளவர்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலையை மட்டும் குறைத்துள்ளது எந்த விதத்தில் நியாயம்? அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அநியாயமாக இருக்கிறது? யார்தான் மக்களுக்கு நல்லது செய்வாங்களோ?

**ஆர். கோவிந்தசாமி,**
***பழ வியாபாரி.***

பழங்களின் வரவு குறைவாக இருக்கும்போது விலை ஏறும். வரவு அதிகமாக இருக்கும்போது விலை குறையும். ஆகையால், இந்த பட்ஜெட்டால் பழங்களின் விலை எகிற வாய்ப்பில்லை. 2005ல் தங்கம் சவரன் ரூ. 5 ஆயிரம் ரூபாய்க்கு இருந்தது. இப்போது ரூ. 13 ஆயிரம் ஆகிவிட்டது. இந்நிலையில் இந்த பட்ஜெட்டால் மேலும் தங்கம் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விலைவாசி எப்பவும் ஏறிக்கிட்டே இருக்கு. ஆகையால், ஆடம்பரப் பொருட்களுக்கு வரிச் சலுகை கொடுப்பதற்குப் பதில் அத்தியாவசிய பொருட்களுக்கு வரிச் சலுகை கொடுத்தால் பாமர மக்கள் மகிழ்வார்கள்.

படங்கள் : வேணு